செய்தி வெளியீடு எண். 189 நாள்: 09.04.2018

**2018-ம் ஆண்டிற்கான ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது, அர்ஜுனா விருது மற்றும் தயான் சந்த் விருதுகளுக்கு விண்ணப்பிக்கலாம் - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

2018-ம் ஆண்டிற்கான ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது, அர்ஜுனா விருது மற்றும் தயான் சந்த் விருது ஆகிய விருதுகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இவ்விருது பன்னாட்டு அளவில் சாதனை படைத்த விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கபடவிருக்கிற விருதாகும். 2014-ம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதி முதல் 2017-ம் ஆண்டு டிசம்பர் வரையிலான நான்கு ஆண்டுகளில் பெற்ற சாதனைகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

தகுதிவாய்ந்த வீரர்கள், பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள். 15.04.2018. விண்ணப்பப் படிவங்களை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், ஒருங்கிணைந்த மாவட்ட விளையாட்டரங்கம், திருவள்ளுர் மாவட்டம் என்ற முகவரியில் அனுப்ப வேண்டும்.

மேலும், விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், திருவள்ளுர் அவர்களின் கைபேசி 7401703482 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளுர்.**